**பொதுக்காலத்தின் இருபத்தேழாம் ஞாயிறு**

**திருவழிபாடு ஆண்டு - B**

**2024-10-06**

*(இன்றைய வாசகங்கள்:*

*தொடக்க நூலிலிருந்து வாசகம்.* 2:18-24,

*பதிலுரைப்பாடல்: திபா.* 128:1-6,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்.* 2:9-11,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 10: 2-16)

*திருப்பலி முன்னுரை*

*இறையாட்சிக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தேழாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். நாம் அனைவரும் உறவில் ஒன்றித்திருக்க இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. மனிதர்கள் எல்லோரும் கடவுளின் படைப்புகளாகிய இயற்கையோடும், மற்ற மனிதர்களோடும் ஒன்றித்து வாழ வேண்டுமென இன்றைய வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. சிறப்பாக அனைத்து உறவுகளுக்கும் உயிர் கொடுக்கும் திருமண உறவு பற்றி இயேசு பேசுகிறார். கணவனும் மனைவியும் அன்பில் ஒன்றித்திருக்க கடவுளால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் என்று இயேசு அறிவுறுத்துகிறார். அதே வேளையில், குழந்தைகளைப் போல தூய உள்ளம் கொண்டவர்களுக்கே இறையாட்சியில் இடம் கிடைக்கும் என்பதையும் அவர் தெளிவுபடுத்துகிறார். சிறு பிள்ளைகளைப் போன்று இறையாட்சியை ஏற்றுக்கொள்ளும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்பின் இறைவா!*

*திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள். அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினரை நிறைவாக ஆசிர்வதித்து உமது அன்புப் பாதையில் அவர்களை வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*படைப்பின் நாயகனே எம் இறைவா!*

*உமது சாயலில் படைத்த மனிதர்களின் தீயச்செயல்களையும் வஞ்சக எண்ணங்களையும் மாற்றி உமக்குரிய மக்களாக அவர்கள் வாழவேண்டிய அருளைப் பொழிந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*கருணையின் கடலே எம் இறைவா!*

*இன்றைய உலகில் கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் காரணமாக விவாகரத்து தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அவர்களின் நல்வாழ்விற்காக மன ஒற்றுமையையும் மன அமைதியையும் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மீட்பின் நாயகனே எம் இறைவா!*

*நீர் சிறிது காலம் வானதூதரை விடச் சற்றுத் தாழ்ந்தவராகவே வாழ்ந்தீரே உம்மைப் போல நாங்களும் தாழ்ச்சி நிறைந்த குணமுடையவர்களாக வாழ் வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

5 *உமது பெயரை என் சகோதர, சகோதரிகளுக்கு அறிவிப்பேன் என்று கூறிய இறைவா!*

*உம்மைப் பற்றி அறியாத மக்களுக்கு உமது பெயரின் மேன்மையையும் மாட்சியையும் எடுத்துக் கூறும் மக்களாக எங்களை மாற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*துன்பங்களை நீக்குபவராம் இறைவா,*

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும் அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*துன்புற அழைப்பவராம் இறைவா,*

*உம் திருமகன் இயேசுவின் சிலுவைப் பயணத்தைப் பின்பற்றி, இறையாட்சியின் இலட்சியங்களுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் நல்ல உள்ளத்தை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தந்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*